**<u>சுருக்கம்</u>**

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை – தமிழ்நாடு நரிக்குறவர் நலவாரியம் – நரிக்குறவர் நலவாரிய உறுப்பினர்களுக்கு தொழில் தொடங்க மானியம் வழங்கல் – ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

---

**பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்(பிந 3) துறை,**

அரசாணை (நிலை) எண்: 15 நாள்: 05.03.2010

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண். 60, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, நாள் 27.5.2008.
2. அரசாணை (நிலை) எண். 87, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, நாள் 8.8.2008.
3. அரசாணை (நிலை) எண். 106, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, நாள் 28.10.2008.
4. அரசாணை (நிலை) எண். 50, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, நாள் 1.7.2009.
5. மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையரின் கடித எண். எப்1/2464/08, நாள் 12.11.2008, 11.02.2009, 18.2.2009 மற்றும் 22.9.2009. .

* * * *

**<u>ஆணை:</u>**

மேலே ஒன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் நரிக்குறவர்களுக்கு கல்வி மற்றும் தொழில்பயில்வதற்கான உதவி அளிக்கவும், அவர்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்குவதற்காகவும் தமிழ்நாடு நரிக்குறவர் நலவாரியம் அமைக்கப்பட்டு பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்குவதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாக மற்றும் மூன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் தமிழ்நாடு நரிக்குறவர் நலவாரியம் செயல்படுத்துவதற்கான வழிகாட்டி நெறிமுறைகள் குறித்தும், அந்நெறிமுறைகளுக்கு திருத்தமும் வெளியிடப்பட்டுள்ளது.

3. மேலே நான்காவதாக படிக்கப்பட்ட அரசாணையில் தமிழ்நாடு நரிக்குறவர் நலவாரிய உறுப்பினர்களின் குழந்தைகளுக்கு கல்வி உதவித்தொகை வழங்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

4. மேலே ஐந்தாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் நரிக்குறவர் நலவாரிய உறுப்பினர்கள் தொழில்புரிய 50%

மானியத்துடன் கூடிய கடனுக்கு பதிலாக முழுத்தொகையும் மானியமாக வழங்குமாறு கோரியிருந்தார்.

**5.** மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையரின் செயற்குறிப்பை அரசு கவனமாக ஆய்வு செய்து, நரிக்குறவர் நலவாரிய உறுப்பினர்கள் அனைவரும் சுயதொழில் தொடங்கி, வாழ்வில் பொருளாதார முன்னேற்றம் காண வேண்டுமென்பதைக் கருத்தில் கொண்டு கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது.

i) தமிழ்நாடு நரிக்குறவர் நலவாரியத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்கள் தனியாகத் தொழில் தொடங்க பதிவு செய்த உறுப்பினருக்கோ அல்லது அவரைச் சார்ந்த 18 வயதுக்கு மேற்பட்ட குடும்ப அங்கத்தினருக்கோ அதிகபட்சமாக ரூ. 7,500/– ( ரூபாய் ஏழாயிரத்து ஐநூறு மட்டும்) முழு மானியமாக நரிக்குறவர் நலவாரிய நிதியிலிருந்து வழங்கிட அரசு ஆணையிடுகிறது.

ii) நரிக்குறவர் நலவாரிய உறுப்பினர்கள் குழுக்களாகச் சேர்ந்து தொழில் தொடங்குவதற்கு தனிநபர் மான்யமாக ரூ. 10,000/– (ரூபாய் பத்தாயிரம் மட்டும் ) அல்லது குழுவிற்கு ரூ. 1,25,000 (ரூபாய் ஒருஇலட்சத்து இருபத்தைந்தாயிரம் மட்டும்) மான்யமாக பின் நிகழ்வாக (Back ended subsidy) வழங்கிடவும் அரசு ஆணையிடுகிறது. இந்த நிதி உதவி தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் நடைமுறையிலுள்ள விதிகளுக்கு உட்பட்டு வழங்கிடவும் அரசு ஆணையிடுகிறது.

**6.** மேற்காண் மானியத் தொகை பதிவு செய்த உறுப்பினருக்கு அல்லது குடும்பத்தில் ஒருவருக்கு ஒருமுறை மட்டுமே வழங்கப்படும்.

**7.** இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்குரிய வழிகாட்டி நெறிமுறைகள் அடங்கிய முன்மொழிவை உடன் அரசிற்கு அனுப்பி வைக்குமாறு ஆணையர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

**9.** இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண். 43/து.செ(TM)/10, நாள் 05.03.2010–இன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

து. நா. இராமநாதன்,
அரசுச் செயலாளர்

<u>பெறுநர்</u>

தமிழ்நாடு நரிக்குறவர் நலவாரிய உறுப்பினர் – செயலர், மற்றும்
மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர்,
சென்னை –5.
ஆணையர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை, சென்னை-5
பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர்,சென்னை.–5
அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர்கள்.
நரிக்குறவர் நல வாரியத்தின்தலைவர், துணைத்தலைவர் மற்றும்
அனைத்து அலுவல்சாரா உறுப்பினர்கள்(நரிக்குறவர் நல வாரிய
உறுப்பினர் – செயலர் வழியாக)
அனைத்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர்
நல அலுவலர்கள்
அரசு செயலாளர், நிதித்துறை, சென்னை–9.
அரசு செயலாளர், வருவாய்த்துறை, சென்னை–9.

அரசு செயலாளர், சமூக நலம் மற்றும் சத்துணவுத்துறை, சென்னை–9.
அரசு செயலாளர், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர்
மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, சென்னை–9.
அரசு செயலாளர், பள்ளிக்கல்வித்துறை, சென்னை–9.
இயக்குநர், பள்ளிக்கல்வித்துறை, சென்னை-6
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக்கழகம், சென்னை–2.
முதலமைச்சரின் செயலர், சென்னை–9,
மாநில கணக்காயர், சென்னை18/35
சம்பள கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை.–5
நிதி (பி,மிபி)த்துறை, சென்னை–9.
தொழிலாளார் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, சென்னை–9
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை–9
தலைமைச் செயலரின் தனிச் செயலர், சென்னை–9
முதலமைச்சரின் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நல அமைச்சரின்
முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
இருப்புக்கோப்பு/உபரி நகல்.

**// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //**

**பிரிவு அலுவலர்.**